**செய்தி வெளியீடு எண்:167** **நாள் : 21.04.2015**

**செய்தி வெளியீடு**

# அரசின் நான்காண்டு மகத்தான சாதனைகள் மக்களுக்கு முழுமையாக சென்றடைய செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்கள் சிறந்த முறையில் விளம்பரப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

———

## செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திரபாலாஜி பேச்சு

———

அரசின் நான்காண்டு மகத்தான சாதனைகள் மக்களுக்கு முழுமையாக சென்றடைய செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்கள் சிறந்த முறையில் விளம்பரப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் பேசினார்கள்.

மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் பிற துறைகளில் செய்தித் துறையின் சார்பில் அயற்பணியில் பணியாற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் இன்று (21.04.2015) காலையில் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள அன்னை தெரசா மகளிர் வளாக கூட்ட அரங்கில் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் கூறியதாவது:-

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழை எளிய மக்களின் நலன் கருதி எண்ணற்ற திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றியுள்ளார்கள். ஒவ்வொரு துறையிலும் வியக்கத்தகு திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தியதன் விளைவாக, மக்கள் பெரிதும் பயனடைந்துள்ளார்கள்.

கடந்த நான்கு ஆண்டுகளில், ஒவ்வொரு அரசு துறையின் திட்டங்களையும், சாதனைகளையும் சமுதாயத்தில் அடித்தளத்தில் வாழ்கின்ற மக்கள் முதல் அனைத்துத் தரப்பினரும் அறிந்து கொள்கின்ற வகையிலே விளம்பரப் பணிகளை செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்கள் முனைப்புடன் மேற்கொள்ள வேண்டும். எந்த நோக்கத்திற்காக அரசு திட்டங்கள் உருவாக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டுள்ளதோ,

அதனை உணர்ந்து செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் பயனடைந்த பயனாளிகள் குறித்து வெற்றிக் கதைகள் எழுதி, நாளிதழ்களில் வெளியிடச் செய்திட வேண்டும்.

அரசு திட்டங்கள் மூலம் பொதுமக்கள் அனைவரும் பயனடைய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் உங்கள் பணி அமைய வேண்டும். செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஒரு சமுதாயப் பணி, புண்ணியமானப் பணி, ஏழை, எளிய மக்களின் வாழ்விற்கு வழிகாட்டுகின்ற அளப்பரியப் பணியாகும். இதனை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் நன்கு உணர்ந்து, எழை எளிய மக்களுக்கு மேலும் பல்வேறு அரசு திட்டப் பயன்கள் கிடைப்பதற்கு முடிந்த அளவு உதவிட வேண்டும். மனித நேயத்துடனும், கடமை உணர்வுடனும் செயல்பட வேண்டும்.

மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்கள் அரசின் வளர்ச்சிப் பணிகளை முழுமையாக மக்கள் அறிவதற்கு ஏதுவாக செய்தியாளர் பயணங்களை ஏற்பாடு செய்து, இவை குறித்த செய்திகளை நாளிதழ்களில் நல்லமுறையில் வெளிவர உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். செய்தியாளர்களுடனும், பத்திரிகை அலுவலகத்துடனும் நல்ல தொடர்பு வைத்துக் கொண்டு, நல்லுறவை தொடர்ந்து பேணிப் பாதுகாத்து வரவேண்டும்.

ஒரு அரசிற்கு நல்ல பெயர் கிடைப்பதற்கு செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி மிகவும் இன்றியமையாதது. இதனை உணர்ந்து மிகவும் கவனமாகவும், சுறுசுறுப்பாகவும் செயல்பட வேண்டும். செய்திகளை உடனுக்குடன் வெளிவரச் செய்ய வேண்டும். காலதாமதம் ஏற்பட்டால் எந்தவிதப் பயனும் இல்லை. தொடர்ந்து அரசிற்கும், மக்களுக்கும் ஒரு இணைப்புப் பாலமாக, நல்லுறவைப் பேணிப் பாதுகாக்கும் தூதுவராக, செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்கள் விளங்கிட வேண்டும். செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்கள் பணிகளை ஆர்வத்துடனும், அதே நேரத்தில் புத்திசாலித்தனத்துடனும் மேற்கொள்ள வேண்டும். வீண்வாதங்களை தவிர்க்க வேண்டும். வேகத்துடனும் அதே நேரத்தில் விவேகத்துடனும் செயல்பட வேண்டும். ஒவ்வொரு செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களும் நல்லமுறையில் பணியாற்றி வருகிறார்கள். இதற்காக எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் தொடர்ந்து இதுபோன்று நல்லமுறையில் பணிகளை மேற்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

தமிழரசு இதழ்களில் அரசின் திட்டங்கள், சாதனைகள் குறித்த கட்டுரைகள் எழுதி வெளிவரச் செய்ய வேண்டும்.

முக்கிய விழாக்கள், மக்கள் அதிக அளவு கூடும் நிகழ்ச்சிகளின்போது அரசின் சாதனைகளையும், திட்டங்களையும் விளக்கி புகைப்படக் கண்காட்சிகள் செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்கள் நடத்த வேண்டும். வீடியோ படக்காட்சிகளை நாள்தோறும் தவறாமல் கிராமங்களில் காண்பிக்க வேண்டும். இதன் வாயிலாக அரசு திட்டப்பயன்கள் மக்களுக்கு எளிதில் சென்றடைகின்ற வாய்ப்பு ஏற்படும்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் தகவல்கள் மற்றும் சாதனைகள் தொகுப்பு வங்கி கணினியில் விரைவில் தொடங்கப்படும். இதன் மூலம் தமிழக அரசின் பல்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் சீரிய திட்டங்கள், நலத்திட்ட உதவிகள், திட்டப் பயனாளிகள் மற்றும் சாதனைகள் குறித்த முழு விவரங்களை மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் மாதந்தோறும் சேகரித்துத் தகவல் பரிமாற்றம் செய்திட வழிவகை செய்யப்படும்.

மாவட்டங்களில் உள்ள நினைவகங்களுக்கு செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்கள் அவ்வப்போது நேரடியாகச் சென்று ஆய்வு செய்து நினைவங்களை தொடர்ந்து நல்ல முறையில் பராமரித்துவர உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். குறைகள் காணப்பட்டால் அதனை சரிசெய்ய உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரையரங்குகளில் அரசின் செய்திப்படங்கள் முறையாக, அனைத்துக் காட்சிகளிலும் காண்பிக்கப்படுகிறதா? என்பதை செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்கள் ஆய்வு செய்ய வேண்டும். செய்திப்படம் காண்பிக்கப்படாத திரையரங்குகளின் மீது துறை வாரியான நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தெரிவிக்க வேண்டும்.

புகார்களுக்கு இடமின்றி மக்கள்தொடர்பு அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும். பணிகள் திறன்பட அமைய மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர்கள் ஒருவொருக்கொருவர் கலந்தாலோசித்து பணியாற்ற வேண்டும்.

மக்களின் நலன் கருதி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எண்ணற்ற திட்டங்களை உருவாக்கி, செயல்படுத்தியுள்ளார்கள். குறிப்பாக, மக்கள் மத்தியில் சிறப்பான வரவேற்பைப் பெற்றுள்ள அம்மா உணவகம், அம்மா குடிநீர், அம்மா உப்பு, அம்மா மருந்தகம் போன்ற திட்டங்களை சிறந்த முறையில் விளம்பரப்படுத்தி, மக்கள் பயன்பெறச் செய்திட வேண்டும்.

செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்கள் நல்ல முறையில் பணியாற்றி, அரசுக்கும், துறைக்கும் நல்ல பெயர் பெற்றுத் தர வேண்டும்.

கடந்த நான்கு ஆண்டுகளில் ஒவ்வொரு துறையிலும் வியக்கத்தகு சாதனைகளை நம் அரசு படைத்துள்ளது. அந்தச் சாதனைகளையெல்லாம் நல்லமுறையில் மக்களுக்கு செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்கள் கொண்டு சேர்க்க வேண்டும் என மீண்டும் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் பேசினார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் செப்டம்பர் 2014 முதல் மார்ச் 2015 வரையிலான காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆய்வுக் கூட்டத்தில் செய்தி வெளியீடுகளின் எண்ணிக்கை, செய்தியாளர் சுற்றுப்பயணம், பத்திரிகையாளர் நலன், பத்திரிகையாளர் ஓய்வூதியம், வீடியோ

படக்காட்சி, கேபிள் டிவி, திரையரங்க ஆய்வு, தமிழரசு சந்தா, வெற்றிக் கதைகள், சிறு புகைப்படக் கண்காட்சிகள், பல்துறை பணி விளக்க முகாம்கள், நினைவகங்கள், காலிப் பணியிடங்கள், துறைத் தணிக்கை, மாநில கணக்காயர் தணிக்கை, நீதிமன்ற வழக்குகள், நிலுவையில் உள்ள கோப்புகள், வாகனங்கள் குறித்தும், பிற துறைகளில் பணியாற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணிகள் குறித்தும் மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் மூ. இராசாராம், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்து பேசினார்கள். செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார்கள், கூடுதல் இயக்குநர் (செய்தி) திரு. எஸ்.பி. எழிலழகன் அவர்கள் நன்றி கூறினார்கள். கூட்டத்தில் கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) திரு. தங்கப் புகழேந்தி, இணை இயக்குநர்கள் திரு. கு. தாணப்பா, திருமதி டி.ஆர். ஜெயஸ்ரீ, திரு. உல. ரவீந்திரன், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், அனைத்து மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்கள், பிற துறைகளில் செய்தித் துறையின் சார்பில் அயற்பணியில் பணியாற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் பிரிவு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**